# சிதறல் பார்வை / ஒளி முணைப்படாமை
# கருவிழித் திறப்பு. (A.K)

## நோயாளியின் தரவு

நோயாளியின் பெயர் ......................................... வயது/பாலினம் ................................
நோயாளியின் அடையாளம்: ............................ தேதி ......................................................
மகன் / மகள் ..................................................முகவரி...........................................................
தொலைபேசி.................................................................................................................................

## சிகிச்சை நடைபெறும் மருத்துவமனை

## மருத்துவரின் பெயர்

## நோய் அறிதல் & திட்டமிடப்பட்டுள்ள சிகிச்சை

புள்ளிக் குவியமின்மை கருவிழித் திறப்பு என்பது நுண்ணோக்கி , வழியாக ஒன்றாகவோ , அல்லது ஜோடியாகவோ ,6 அல்லது7 மில்லி மீட்டர் அளவில் கருவிழியின் , ஒளியியல் மண்டலத்தில்)OPTICAL ZONES(, வளைவான கீறல் இடும் அறுவை சிகிச்சை அல்லது ; கரு வெண் விழி சந்திப்பில்)LIMBUSதளர்வு ( ஏற்படுத்தும் கீறல்கள் இடும் அறுவை சிகிச்சை இந்த . கீறல்கள் கருவிழியின் செங்குத்தான பகுதியைத் தட்டையாக்கி , உருண்டை வடிவக் கருவிழியைக் கொண்டு வருவதற்காக செய்யப்படுகிறது இந்த . சிகிச்சையின் நோக்கம் கண்ணாடி அணியாமல் தெளிவற்ற பார்வையைக் கொடுப்பது என்றாலும்அதற்கான உத்திரவாதம் , தர இயலாது .

இது ஒரு தேர்ந்தெடுக்கப்படுகிற சிகிச்சை இதை . செய்தே ஆக வேண்டிய கட்டாயமோ அவசரமோ கிடையாது கண்ணாடி . அல்லது கருவிழி தொடு ஆடி அணிவதன் மூலமே நல்ல பார்வையைத் தொடர்ந்து பெறலாம் இந்த . அறுவை சிகிச்சை மற்ற சிகிச்சைகளைப் போலவே சில ஆபத்துகள் சூழ்ந்தது அவைகள் . பின்வரும் பத்தியில் பட்டியல் இடப்பட்டுள்ளது . உங்கள் மருத்துவருக்கே தெரியாத சில ஆபத்துகள் பின்னாளில் , தெரிய வாய்ப்பிருக்கிறது என்பதையும் நோயாளி அறிந்து கொள்ள வேண்டும் . சிறந்த கவனிப்பு கொடுத்தபோதும் பக்க , விளைவுகளும் பின் விளைவுகளும் நேரலாம் உங்களுக்கு . இப்படி நேர்ந்தால் உங்கள் , பார்வை குறையுமளவுக்குக்கூட முடிவுகளில் பாதிப்பு ஏற்படலாம் .

## வேற்றுவழிமுறைகள்

இந்த சிகிச்சை செய்துகொள்ள வேண்டாம் என்று முடிவெடுத்தால் புள்ளிக், குவியமின்மையை சரி செய்ய வேறு முறைகள் உள்ளன இவை . கண்ணாடி அணிதல் கருவிழி , தொடு ஆடி ,லேசிக் ,PRK )ஒளி வழி ஒளி விலகல் கருவிழி பகுதி நீக்க அறுவை சிகிச்சைபோன்றவை (

## நோயாளியின் ஒப்புதல்

**என் கண் மருத்துவர்**AK- ASTIGMATIC KERATOTOMY - புள்ளிக் குவியமின்மை கருவிழித் திறப்பு செய்ய ஒப்புதல் முழு மனதுடன் அளிக்கிறேன் என் . அறுவை சிகிச்சைக்குப் பின் முழு வெற்றி கிடைக்கும் என்ற எந்தவித உறுதியும் அளிக்கப்படவில்லை என்பதைப் பிரகடனப் படுத்துகிறேன் . பின்வரும் ஆபத்துகள் இந்த சிகிச்சைக்குப்பின் நேரலாம் என்பத நான் நன்கு புரிந்து கொண்டேன் .

1. சிகிச்சைக்குப்பின் பார்வையில் முன்னேற்றம் ஏற்படாமல் போகலாம் என்பதையும் எதிர்பார்த்த விளைவுகள் , கிடைக்காமல் போகலாம் என்பதையும் நன்கு புரிந்து கொண்டேன் பின்னாளில்இன்னொரு . அறுவை சிகிச்சை செய்ய நேரிட்டாலும் நேரிடலாம் என்பதையும் , கண்ணாடி அணியத் தேவை இருந்தாலும் இருக்கலாம் என்பதையும் நன்கு புரிந்து கொண்டேன் இந்த . சிகிச்சைக்குப்பின் கருவிழி தொடு ஆடி அணிய முடியாமலும் போகலாம் என்பதையும் உணர்ந்து கொண்டேன் .
2. இந்த சிகிச்சைக்குப் பின் எனக்குப் பார்வை இழப்பு ஏற்படலாம் என்பதையும் ,அல்லது சரிசெய்யப்பட்ட சிறந்த பார்வையில் குறைபாடு நேரலாம் என்பதையும் அறிந்து கொண்டேன் கிருமித் . தொற்று வாயிலாக இது நேர்ந்தால் என் , முழுப் பார்வையையும் , கண்ணையும் நான் இழக்க நேரிடலாம் என்பதை அறிந்து கொண்டேன் .
3. கீறல்கள் ஆறும்பொழுது ஒழுங்கற்று ஆறினால் கருவிழியின் மேற்பரப்பு கோணல் மானலாகலாம் அந்த .சூழ்நிலையில் கருவிழி ஒட்டு ஆடி அணியவேண்டி இருக்கலாம் சமயத்தில் . அதை அணிந்தாலும் பார்வை முழுதாகக் கிடைக்காமல் போகலாம் என்பதையும் அறிந்து கொண்டேன் .
4. சூரிய ஒளி மற்றும் அதிக ஒளி ஒமிழும் விளக்குகளின் முன்பு இருக்கும்போது ஒளி உணர்வு தாங்க முடியாத அளவு தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ இருக்கலாம் என்பதை உணர்ந்து கொண்டேன் .
5. தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ ஒளியைச் சுற்றி வண்ண வளையங்கள் குறிப்பாக மாலை நேரங்களில் மங்கிய ஒளியில் தோன்றலாம் என்பதையும் அது வாகனம் ஓட்டுவதற்கு எனக்கு இடையூறாக இருக்கலாம் என்பதையும் நன்கு புரிந்துகொண்டேன் .

6. மூன்று அல்லது அதற்கு அதிகமான காலம் கூட பார்வையில் ஏற்ற இறக்கம் இருக்கலாம் என்பதை அறிந்து கொண்டேன் .
7. எல்லா அறுவை சிகிச்சையிலும் கீறல்கள் தழும்பை உருவாக்கும் . இதுவும் அதற்குவிதி விலக்கல்ல என்பதைப் புரிந்து கொண்டேன் .
8. சிகிச்சைக்குப் பின் புண் ஆறும் காலத்திலும் ,ஆறிய பின்னும்கூட, கீறல் போட்ட இடம் சற்றே மற்ற திசுவைப்போல உறுதியற்று இருக்கும் என்பதால் மட்டை , விளையாட்டுகள் உடல் தொடும் விளையாட்டுகள் போன்றவற்றில் ஈடுபடும்போது ஒரு பாதுகாப்புக் கண்ணாடி அணிந்து கொள்வது நல்லது என்பதை உணர்ந்து கொண்டேன் நேரடியாக . கண்ணில் அடிபட்டால் கீறல் , போட்ட இடங்களில் ஓட்டை ஏற்படலாம் என்பதையும் உணர்ந்து கொண்டேன் .
9. அப்படி ஏற்பட்டால் அதற்கு , தையல் போட வேண்டிய அவசியம் ஏற்படலாம் என்பதை உணர்ந்து கொண்டேன் தழும்பில் . இரத்த நாளங்கள் வளரலாம் புண் , ஏற்படலாம் கருவிழி , மேற்பரப்பு ஆறாத தன்மை மிக , அரிதாக கண் முழுதும் சீழ் பிடித்தல் போன்றவையும் நிகழலாம் என்பதையும் அறிந்து கொண்டேன் .
10. மயக்க மருந்து செலுத்துவதாலும் மருந்து , ஒவ்வாமை போன்றவைகளாலும் பக்க விளைவுகள் ஏற்படலாம் என்பதைப் புரிந்துகொண்டேன் இதனால் . ஏற்படும் அனைத்து பக்க விளைவுகளையும் முழுதாக சொல்ல இயலாது என்பதையும்இதில் , குறிப்பிட்ட பக்க விளைவுகளும் முழுமையானதாக இருக்க இயலாது என்பதையும் அறிந்து கொண்டேன் .

## நோயாளி புரிந்து கொண்டதற்கான ஒப்புதல் படிவம்

**என் கண் மருத்துவர்**AK- ASTIGMATIC KERATOTOMY - புள்ளிக் குவியமின்மை கருவிழித் திறப்பு பற்றிய முழு விவரங்களையும் எடுத்துரைத்து நான் , கேள்விகள் கேட்க வாய்ப்பளித்து அதற்கான விடைகளும்நான் , திருப்தி அடையும் வகையில் அளித்தார் நான் . இந்த முழு ஒப்புதல் படிவத்தையும் படித்துப் பார்த்தேன் எனக்குப் / படித்துக் காண்பிக்கப் பட்டது இதன் . பலன்கள் பக்கவிளைவுகள் பின்விளைவுகள் , ஆகியன பற்றி முழுமையாக அறிந்து கொண்டு இந்த , அறுவை சிகிச்சையை என் வலது /இடதுகண் / இரண்டு கண்களுக்கும் செய்துகொள்ள மனபூர்வமாக சம்மதிக்கிறேன் .

நோயாளி/ பெற்றோர்/ பாதுகாவலரின்கையொப்பம் / கட்டைவிரல்பதிவு:
பெயர்:.....................................உறவு....................................தேதி..................................................
முகவரி:.....................................................................................................................................
தொலைபேசி (அலு.) ......................... (வீடு....................... (கைபேசி.) .............................

## மருத்துவரின் பிரகடனம்

செய்யப்படும் அறுவை சிகிச்சை முறையின் இயல்பு மற்றும் பின் விளைவுகளை நோயாளிக்கு விளக்கிக் கூறியுள்ளேன் நோயாளிக்கு . தொடர்புள்ள நேரக்கூடிய இன்னல்களையும் விவரித்துள்ளேன் .

நோயாளிக்கு கேள்விகள் கேட்கும் வாய்ப்பையும் அதற்கான விடைகளையும் கொடுத்துள்ளேன் .

மருத்துவரின்கையெழுத்து ..................................................................
மருத்துவரின்பெயர் ..................................................................
தேதி ..................................................................

சாட்சி 1
கையொப்பம்: ...................................
பெயர்:..................................................
முகவரி: ............................................
தொலைபேசி ...................................
கைபேசி..............................................

சாட்சி 2
கையொப்பம்: ...................................
பெயர்:..................................................
முகவரி: .. ..........................................
தொலைபேசி: ...................................
கைபேசி ..............................................